2014 ஆகஸ்ட் 7]

372—

சொந்தக் கட்டடம்

***20539—திரு. வீ.பி. நாகைமாலி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூர் கிளை நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைப் பணிந்து வணங்கி, என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கீழ்வேளூர் கிளை நூலகம் மாதம் ரூ.4,000 வாடகையில், வாடகைக் கட்டடத்தில் தற்போது செயல்பட்டு வருகிறது. இந்நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட காலி மனை ஒதுக்கீடு செய்து தருமாறு நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியருக்கும், மாவட்ட நூலக அலுவலருக்கும் கடிதம் எழுதப்பட்டுள்ளது. காலி மனை பெறப்பட்டவுடன், கீழ்வேளூர் கிளை நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

திரு. வீ.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூரில் செயல்பட்டு வரும் கிளை நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்ற கோரிக்கை, அப்பகுதி மக்களிடம் நீண்ட காலமாக இருந்து வருகிறது. கீழ்வேளூர் வட்டத் தலைநகரமாக இருப்பதால், மக்கள்தொகை நாளுக்குநாள் உயர்ந்து வருகிறது. இதனால்

வாசகர்களின் எண்ணிக்கையும் கூடுதலாகிக் கொண்டிருக்கிறது. தற்போது வாடகை நூலகம் வாசகர்கள் அமர்ந்து வாசிப்பதற்கும் நெருக்கடியாக உள்ளது. எனவே, புதிய நூலகக் கட்டடம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வந்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அதேநேரத்தில், அங்கே இடம் தேர்வு செய்வதில் வட்டாட்சியர் போன்ற அதிகாரிகள் சுணக்கம் காட்டுகிறார்கள். ஆகவே, விரைந்து, அந்த இடத்தைத் தேர்வு செய்து, கிளை நூலகத்தைக் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் கிளை நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட காலி மனை வேண்டி, மாவட்ட ஆட்சியருக்கும், கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினருக்கும், மாவட்ட நூலக அலுவலர் 22-1-2014 அன்று கடிதம் எழுதியுள்ளார். அதனைத் தொடர்ந்து 6-2-2014 மற்றும் 22-7-2014 ஆகிய தேதிகளில் நினைவூட்டுக் கடிதங்களும் அனுப்பப்பட்டுள்ளன. கீழ்வேளூர் கிளை நூலகத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக காலி மனை ஒதுக்கீடு செய்யப்பட்டவுடன், சொந்தக் கட்டடம் கட்ட, மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வீ.பி. நாகைமாலி: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 373, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*